

திருச்சி திருவரங்கத்தில் இந்தி திணிப்பு, தொகுதி மறு சீரமைப்பில் அநீதி தமிழகத்திற்கான போதிய நிதியை வழங்காத ஒன்றிய அரசை கண்டித்து , மாநகர தி.மு.க. இளைஞரணி சார்பில் திருவானைக்காவல் பகுதியில் நடை பெற்ற கண்டன ரெதுக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். பொறியாளர் அணி செயலாளர் கருணா, இளம் கழகப் பேச்சாளர் சேக் அலிமா மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர மேயர் அன்பழகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், பொறியாளர் அணி செயலாளர் கருணா, அவைத் தலைவர் பேரூர் தர்மலிங்கம், திருவானைக்கோவில் பகுதிக் கழகச் செயலாளர் ராம்குமார், கனகராஜ், மோ கன்தாஸ் இளங்கோ உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சேலம் மத்திய மாவட்டத்தில்

# மக்களின் தாகம் தீர்க்க தண்ணீர் பந்தல் திறப்பீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், மார்ச். 10-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் -அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கோடைக்கால வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி, மார்ச் மாத துவக்கத்திலேயே வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் தமிழக மக்களைஇக்கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தமிழகத்தில் உள்ள மாநகர, பகுதி, பேரூர், வட்டம் மற்றும்



கிராமங்கள் என அனைத்து இடங்களிலும் - மக்கள் அதிகம் கூடும் இடங்களானதெருமுனைச்சந்திப்புகளிலும் - சாலை மற்றும் தெருக்கள் ஓரமாகவும், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் யாருக்கும் எவ்வித இடையூறு இல்லாமல் "தண்ணீர் பந்தல்" அமைத்து, பொதுமக்களின் தாகம் தீர்த்திட வேண்டுமெனவும்,

அவ்வாறு தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தலில் குடிநீர், நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி போன்ற கோடை வெப்பத்தைதணிக்கும் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கி, அவர்களின் தாகத்தை தணிக்க வேண்டுமெனவும்போற்றுதலுக்குரியகழகத்தலைவர்மாண்புமிகுதமிழ்நாடுமுதலைமைச்சர்அவர்கள்ஆணையிட்டுள்ளார்கள்.

போற்றுதலுக்குரிய கழகத்தலைவர் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, சேலம் மத்தியமாவட்ட- ஒன்றிய- பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கோடை காலம் முழுவதும் இத்தண்ணீர் பந்தல் தொடர்ந்து செயல்பட, தங்களை இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென அன்புடன்கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

## பெரம்பலூர் மாவட்டம்

# குரும்பலூர் பேரூர்க் கழகம் சார்பில் புதுப்பிக்கப்பட்ட அண்ணா சிலை!

### கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. திறந்து வைத்தார்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர்,மார்ச், 10-

பெரம்பலூர் மாவட்டம்,குரும்பலூர் பேரூர் கழகம் சார்பில் 1971ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா சிலை நிறுவப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அப்போது திறந்த வைக்கப்பட்டது. அந்த சிலை தற்போது சேதமடைந்திருந்தது. குரும்பலூர் பேரூர் கழக செயலாளர் எம்.வெங்கடேசன் தலைமையில், பழுது பார்க்கப்பட்டு, வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலையை கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

ஆ.இராசா.எம்.பி. பேசுகையில், காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நேரு தமிழகத்தில் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழி அறிஞர் அண்ணாவின் ஆட்சி காலத்தில் தெரிவித்தார், ஆனால் தற்போது மத்தியில் உள்ள மோடி அரசு இந்தி திணிப்பு மற்றும் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே இனம் என்ற செயலில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் தமிழகத்தில் நாம் கொடுக்கும் வரிப்பணத்தை திருப்பித் தரவும் மறுக்கின்றனர், இதனை தற்போது தமிழக முதல்வர் ஏற்காமல் அறிஞர் அண்ணா, பெரியார், கலைஞர் வழியில் போராடி வருகிறார், மேலும் இந்த அண்ணாவின் சிலையை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், எம். பிரபாகரன்.எம்.எல்.ஏ.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன்,

மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப. பரமேஷ் குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில்,சன். சம்பத்,

மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டுச்செல்வி ராஜேந்திரன், எஸ்.அண்ணாதுரை, கி.முகுந்தன், அழகு.நீலமேகம்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ. வல்லபன், ந. ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நகர் மன்ற துணைத் தலைவர் து.ஆதவன்ஸ(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம்,

டி.ஆர்.சிவசங்கர், ஆர். அருண்,வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன்,

பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ. எம்.ஜாஹிர்உசேன், குரும்பலூர் பேரூர் கழக முன்னாள் செயலாளர் ரமேஷ், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா மற்றும் சுரேஷ், சீரணி பிரபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி வடக்கு ஒன்றிய , பேரூர் திமுக சார்பில் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், வெ.முத்துக்கிருஷ்ணன், உ.முருகேசன் உள்ளிட்டோர் உரையாற்றினார்கள். நிகழ்வில் எஸ்.எஸ்.கருப்பையா, எம்.லியாகத் அலி, மாலா ராஜேந்திரதுரை, எம்.நைனா முகமது, தமிழினியன், சூசைராஜ், தங்கமணி, ஜெனி இளங்கோ, எழில் ராஜா, எம்.ஏ.லத்தீப், சிவ.திருமேனிநாதன், வி.கோவிந்தன், இ.வின்சென்ட், எல்.பெரியதம்பி, எம்.சதாம் உசேன், பரிமளம் செல்லதுரை, பி.மோகன், டி.மதிவாணன், எம்.சாதிக்பாட்ஷா, சத்ய ரவிக்குமார், எஸ்.எம். சேக்முகமது, வி.கே.வீரப்பன், என்.அப்துல் அஜீஸ், ஏ.சி.வெற்றிவேந்தன், ஏ.செல்வராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்ள கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் பவன்குமார், திமுக மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி ,மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், எ கணபதி ராஜ்குமார் எம்.பி. துணைமேயர் வெற்றிச்செல்வன், , மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் அய்யா போட்ட தடத்தில் தமிழின இடர் நீக்க – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரியன !

# தமிழ்நாடு முதல்வரின் பிறந்த நாள் - தமிழர்க்கெல்லாம் திருநாள்!

### ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் சா.செ.சந்திரஹாசன் அறிக்கை!



**சென்னை, மார்ச் 10 –**

**ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகத்தின்நிறுவனர் சா. செ. சந்திரஹாசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், ''தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமின்றி எம். ஈழத் தமிழர் உள்பட உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் தமிழ்நாடு முதல்வரின் பிறந்த நாள் தமிழர்க்கெல்லாம் திருநாளாகும்!'' என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமின்றி எம் ஈழத்தமிழர் உட்பட உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் உங்கள் பிறந்த நாள் தமிழர்க்கெல்லாம் திருநாளாகும். நாளொரு சாதனை, பொழுதொரு திட்டம் எனக் கணந்தோறும் தமிழினத்தைக் கரையேற்றும் வரலாற்றைப் படைத்து வருகிறீர்கள். கடைத்தேற்றும்

தமிழ்நாட்டில் அடைக்கலம் தேடி வந்திருக்கும் எமது ஈழ ஏதிலியர் சமுதாயத்திற்கு, உள்ளூர் மக்களுக்கு என்னென்ன உரிமைகளும் சலுகைகளும், வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றனவோ, அவை அத்தனையும் செய்து கொடுத்துள்ள உங்கள் ஆட்சியின் மாட்சியைப் பாராட்ட வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடுகின்றோம்.

அண்டை நாட்டில் பிறந்த எங்களுக்குத்தான் என்றில்லாமல் அகிலம் முழுவதும் வாழும் தமிழர் நலன்களைப் பேணவும், வளர்க்கவும் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்திவரும் தங்களைப் பார்த்து தமிழன்னையே பிரமித்து நிற்கிறாள். கலைஞர் அய்யா போட்ட தடத்தில் தமிழின இடர்நீக்க நீங்கள் ஆற்றிவரும் தொண்டுகள் அளப்பரியன. அத்தகைய தொண்டுள்ளமும், தொலைநோக்கும் கொண்ட தாங்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

என் சார்பிலும் எம்.ஈழ எதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பிலும் தந்தை செல்வா வழியில் கரையேறத் துடிக்கும் தமிழீழ மக்கள் சார்பிலும் எமது உளமார்ந்த பிறந்த நாள் வாழத்துக்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


## உச்சநீதிமன்ற – ஓய்வு பெற்ற

# நீதிபதி வி.ராமசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 10 -

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி வி.ராமசாமி அவர்கள், நேற்று இரவு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார்.



அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. வி. ராமசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ராமசாமி அவர்கள் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றி 1971-இல் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக உயர்வு பெற்றவர்.

மேலும், 1987-இல் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், பின்னர் 1989-இல் உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் நியமிக்கப் பட்டு 1994 வரை அவர் பணியாற்றினார்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சட்டத் துறையைச் சேர்ந்தோருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## புதுக்கோட்டை தெற்கு ஆவுடையார்கோவிலில்

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மருத்துவ முகாம்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை மார்ச் 10

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ஆவுடையார் கோவிலில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை, புதுக்கோட்டை டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு அறந்தாங்கி முன்னாள் எம்எல்ஏவும், ஆவுடையார் கோவில் வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான உதயம் சண்முகம் தலைமை தாங்கினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன் முன்னிலை வகித்தார்.

சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ். ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வி.மெய்யநாதன் ஆகியோர் மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர்.

முகாமில் மாநில தீர்மான குழு உறுப்பினர் சி.ராமநாதன், மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம், அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றிய திமுக செயலாளர்கள் வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன். கணேசன், எஸ்.எம்.சீனியார் , பொதுக்குழு உறுப்பினர் வீரைய்யா , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணி ராஜன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், அறந்தாங்கி முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி. சிவகுமார், ஆவுடையார் கோவில் ஒன்றிய அவைத் தலைவர் கேசவன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் மதியழகன்,மாணிக்கம், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சுரேஷ், காளீஸ்வரன், திமுக தகவல் தொழில் நுட்ப அணி மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஹாஜா மைதீன், கார்த்திகா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஜீனத் ஐஸ்வர்யா, வினோதன், நைனா முகமது, கார்த்திக், சந்திரசேகர், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் உதயம் சிவசங்கர், அகிலன் சின்னக்கருப்பன், மாணிக்கவாசகம் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அறந்தாங்கி செந்தில் வேலன் செய்து,வரவேற்றார். திமுக தொகுதி ஒருங்கிணைப்பாளர் சமூக வலைதளம் அடைக்கலம் நன்றி கூறினார்



திருப்பூர் மாநகராட்சி, வீரப்பாண்டி மாமரத்தோட்டம் பகுதியில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காவினை அமைச்சர், மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் அரசு செயலாளர், வே.அமுதவல்லி, மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாவட்டச் செயலாளர், இல.பத்மநாபன், இரா.லலிதா, மகேஸ்வரி ரவிக்குமார், எஸ். அம்சவேணி கொண்டனர்.